ஊர்வலம் நடத்துவோம் என்று அறிவித்தார்கள், ஏனோ அது ஒத்திபோடப்பட்டு விட்டது. நான் என்ன கேட்கிறேன் என்றால், நாம் ஏன் இதற்காகவும் டெல்லியில் முதல் அமைச்சர் தலைமையிலேயே ஊர்வலம் நடத்தக்கூடாது, போராடக் கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, போராட வேண்டிய அவசியமான நிலைமை இல்லை, அவர்களே சலுகைகளை தரவேண்டும் என்று முன் வந்திருக்கிறார்கள் என்பது தான் நான் ஏற்கெனவே சொன்ன பதில்.

[முற்பகல் 9-40]

திரு. ஜே. ஜேம்ஸ்: இத்தனை பிரச்னைகளுக்கும் காரணம், அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஷெட்யூல்ட் காஸ்ட் என்று சொன்னால் இந்துவாகத்தான் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆகவேதான் இந்துக்கள் அல்லாத ஷெட்யூல்ட் காஸ்ட்டைச் சார்ந்த மக்களுக்கு இந்தச் சலுகைகள் பெற வாய்ப்பில்லை. ஆகவே, அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு நமது சட்டசபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: புத்த மதத்திற்கு மாறியவர்களுக்கும் இந்தச் சலுகை தற்போது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றும் பிடிவாதம் இருப்பதாக இந்த அரசு கருதவில்லை. ஆகவே சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டிய அவசியமே ஏற்படாது.

கள்ளக்குறிச்சியில் கிளை அச்சகம்

*வினா 54—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கள்ளக்குறிச்சியில் அரசு கிளை அச்சகம் ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இல்லை.

கொடுமுடியாறு அணைத் திட்டம்

*வினா 55—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொடுமுடியாறு அணைத் திட்டம் எப்போது செயல்படும், இத்திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

1979 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கொடுமுடியாறு அணைத் திட்டம் தற்சமயம் மறுபரிசீலனையில் உள்ளது. இத்திட்ட அமைப்பின் நீரியல் சம்பந்தமாக நுட்பமான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன் முடிவுகளைப் பொறுத்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: இந்த கொடுமுடியாறு அணைத்திட்டம் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது? அதனால் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் பயனடையும்? அவசரக் காலச் சட்டம் இருந்தபோது ரூ. 25 இலட்சம் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. அதற்குப் பின்னால் பாசனத் துறை அமைச்சர் அவர்களும், முதன்மைப் பொறியாளர் அவர்களும் மூன்றாண்டு நீர் பிடிப்பை எடுத்து திட்டம் செயல்படுத்தப்படும் என்று கூறினார்கள். இப்போது மூன்றாண்டு நீர்பிடிப்பு இருக்கிறது, நல்ல நீர்பிடிப்பு இருக்கிறது, மழை ஏராளமாக இருக்கிறது. ஆகவே அடுத்தாண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கொடுமுடியாறு அணைத் திட்டம் மூலமாக ஏறத்தாழ ஆறாயிரம் ஏக்கர் பயன்படுகிற அளவில் இருக்கிறது. இத்திட்டத்திற்காக 1975ல்—166 லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டது. இப்போது இருக்கக் கூடிய விலைவாசி அடிப்படையில், எஸ்கலேஷன் காரணமாக, ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாயைத் தாண்டுகிற அளவிற்கு இந்தத் திட்டம் இருக்கும் என்று நம்பப்படுகிறது. நீரியல் சம்பந்தப்பட்ட நுட்ப ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது, அது முடிந்தவுடன் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமா வேண்டாமா என்பது முடிவு செய்யப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப்: கொடுமுடியாறு அணைத் திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மூன்றாண்டு புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டு இதுவரையில் வந்துள்ள தகவல்களின்படி இத்திட்டம் சரிவரச் செயல்பட அத்தனை வாய்ப்புகளும் இருப்பதால் நேரம் கடத்தாமல் அங்குள்ள வரட்சி நிலையை கவனத்தில் கொண்டு உடனடியாக இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா? அதோடு, இந்தத் திட்டத்திற்கு அதிகாரிகள் குறுக்கீடாக இருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், அது வரட்சிப் பகுதியாக இருப்பதால்தான் இந்தத் திட்டம் மீண்டும் மறுபரிசீலனைக்குக் கொண்டுவரப்

பட்டிருக்கிறது. ஏற்கனவே அவசர கால நிலை அமலில் இருந்த போது ரூ. 25 லட்சம் அளவிற்கு அங்கே செலவுகள் செய்யப் பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் கணக்கில் கொண்டுதான் இத்திட்டத்தை மீண்டும் மறு பரிசீலனைக்குக் கொண்டு வந்திருக் கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: இந்தக் கொடுமுடியாறு அணைத் திட்டம் என்று சொல்லப்படுகிற திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே துவங்கப்பட்டு பல லட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்பட்ட திட்டமாகும். ஆளும்கட்சியைச் சேர்ந்த ஒரு முக்கியமான பிரமுகர் தலையிட்டு அதைச் செய்யக்கூடாது என்று தடுத்ததன் காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாக அந்த வட்டார மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அத்திட்டம் நிறைவேற்றப் பட்டால் ஆறாயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுவதோடு மட்டுமல்லாமல் அந்த வட்டாரம் செழிக்கவும் நல்ல வாய்ப்பிருக் கிறது. பரிசீலனை முடிந்த பிறகுதான் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்வது என்பதை விட்டு விட்டு அந்தத் திட்டத்திற்கான வேலைகளை உடனடியாகத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆளுங்கட்சிக்காரர் களாக இருந்தாலும் சரி அல்லது எதிர்கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி ஒரு நல்ல திட்டத்தை யார் குறுக்கிடு செய்தாலும் அதை இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்காது. நாட்டு மக்களின் நன்மையை முதன்மையாகக் கொண்டு இந்த அரசு செயல்படும் என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: நாங்குனேரி பகுதியில் உள்ள விவசாயிகள் மத்தியில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த ஆளும் கட்சியைச் சேர்ந்த தனியாருடைய தென்னங்கன்றுகள் 2500-க்கு மேல் பாதிக்கப்படுவதன் காரணமாக திட்டம் தடை செய்யப்படுமோ என்று அங்குள்ள மக்கள் பயப்படுகிறார்கள். இந்த நேரத்தில், எங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு பாராட்டு தெரிவிக்கிறபோது ''கொடுமுடி கண்ட கொற்றவன்,, என்றும் ''கொடுமுடி கண்ட கோமகன்,, என்று பட்டம் சூட்டி இருக்கிறார்கள். அரசு கொடுத்த பட்டமா அல்லது பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத்தலைவர் அவர்களே, 2,500 ஏக்கர்களில் தனியார்களுக்கு தென்னங்கன்றுகள் பயிரிடப்பட்டிருப்பதாகவும், தென்னந்தோப்புகள் இருப்பதாகவும் அது பாதிக்கப்படுவதாகவும் சொன்னார்கள். அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு வரவில்லை. அப்படி இருந்தாலும், அவர்களுக்

1979 அக்டோபர் 31]

காக முடக்கி வைக்கப்போவதில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அங்கு இருக்கக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தனக்கு பட்டத்தைப் போட்டுக் கொண்டிருப்பதாகவும், 'கொடுமுடிகண்ட கோமகன்' என்றும் 'கொற்றவன்' என்றும் போட்டுக்கொண்டிருப்பதாக சொன்னார்கள். இப்போதெல்லாம் அரசியலில் அவர்களுக்குள்ளேயே தங்களுக்கு வேண்டிய தகுந்த பட்டங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இங்கு இருக்கக் கூடிய உறுப்பினர்கள் உதவி செய்ய மாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இது மத்திய அரசோ அல்லது மாநில அரசோ கொடுக்கவில்லை. அவரால் போட்டுக்கொண்ட பட்டமாக இருக்கலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னங்கன்றுகள் உற்பத்தி.

* வினா 56.—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வீரிய ஒட்டு தென்னை சாகுபடி திட்டத்தின் கீழ் அரசு தென்னை ஆராய்ச்சி பண்ணைகளில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(ஆ) எந்த அடிப்படையில் விற்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

வீவர அறிக்கை* அவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

சின்னசேலம் மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்

* வினா 57—திரு. துரை முத்துசாமி, திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் சின்னசேலம் அரசினர் மருத்துவ மனைக்கு சொந்தமாக புதுக்கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) ஐம்பத்தாறு படுக்கைகள் கொண்ட வட்டத் தலைமையிட மருத்துவமனை 15 கி. மீ. தொலைவில் உள்ள கள்ளக்குறிச்சியில் இருப்பதாலும், தற்போது சின்னசேலம் அரசு மருந்தகம் இயங்கி வரும் இடத்தில் புதிய கட்டிடங்கள் கட்ட போதுமான இடம் இல்லையென்பதாலும், புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

[715-716ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.[